பழுது பார்க்கப்படவில்லை. மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அதிக நிதி ஒதுக்கீடு செய்து இருப்பதால், அரியலூர் கலைக் கல்லூரியும் எடுத்துக் கொள்ளப்பட்டு, முன்னுரிமை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அடிப்படையில் நிதி ஒதுக்கீடு மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. இருந்தாலும்கூட, இப்படிப்பட்ட காரியங்களுக்கு ஏதேனும் நிதிக் கடன் பெற முடியுமா என்பது அரசாங்கத்தின் முயற்சியிலே இருக்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரிக்குக் கட்டிடம் கட்டுவதற்காக பொதுப்பணித்துறைக்கு எந்தத் தேதியில் பணம் செலுத்தப்பட்டுள்ளது? பொதுப்பணித் துறை இவ்வளவு காலத்திற்குள்ளாக அந்தக் கட்டிடம் கட்டி முடிக்க வேண்டும் என்று அரசு ஏதாவது ஆலோசனை வழங்கியுள்ளதா என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்த வரைபடம், கட்டுவதற்கான செயற்பாட்டில் இடையூறு இல்லாமல் நல்ல முறையில் நிறைவேறும் என்பதற்கான சான்று, இவை எல்லாம் சேர்ந்து அரசிற்குக் கிடைத்து 5–9–1989 அன்று பெறப்பட்டு, அரசாணை, 6–3–1990-இல் இப்பணிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு அரசின் பங்குத் தொகையான 2.8 இலட்சம் அளிப்பதற்கு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இது நடைமுறையிலேயே, பல நேரங்களில், சில திட்டங்களை நிறைவேற்றுவதில் அவ்வப்போது ஏற்படுகிற சில கருத்து வேறுபாடு காரணமாக ஏற்படுகிற தாமதத்தினுடைய விளைவாக இருக்க வேண்டும். இருந்தாலும் 6—3—1990-இல் தான் இதற்கான, அரசாங்கத்தினுடைய பங்கு நிதி — யூ.ஜி.சி. யினுடைய நிதியுதவியும் அவர்களுக்குக் கிடைக்கிறது என்பதால் பங்கு நிதி வழங்கப்பட்டு, கட்டுவதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

கல்லூரி அமைத்தல்

* *8049* திரு. எம். கே. கரீம் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கூடலூர் தொகுதிக்கு ஒரு கலைக்கல்லூரி அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

1990 மே 8]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். கே. கரீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் தொகுதியில், சுமார் 2 இலட்சம் வாக்காளர்கள் இருக்கின்ற இப் பெரிய தொகுதியில், இருபதுக்கும் மேற்பட்ட ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. அங்கே ஒரு கல்லூரி இல்லை. இதை நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டிலாவது அது அனுமதிக்கப்படுமா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டு இருப்பதை எடுத்துச் சொன்னார். கடந்த 8 அல்லது 10 ஆண்டுகளாகவே கல்லூரிகள் துவங்குவதற்குத் தேவையான நிதியை அரசு ஒதுக்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டு, கல்லூரிகளே துவங்குவதில்லை என்று ஒரு கொள்கை முடிவே எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தக் கொள்கை முடிவு என்பது அரசாங்கம் அந்த வகையிலே நிதியைச் செலவிட்டால், தொடக்கப் பள்ளியிலேயிருந்து செலவிட வேண்டிய தொகை அந்த மிக, மிகப் பின் தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போய்ச் சேரவேண்டிய பங்கு கிடைக்காமல் போய் விடுகிறது என்ற நிலைமை காரணமாக, எல்லோரும் அறிவு பெற்றவர் ஆகவேண்டும், கல்வி அறிவு பெறவேண்டும் என்ற அந்த அடிப்படை காரணமாக, இப்படி ஒரு கொள்கை ஏற்கப்பட்டிருக்கிறது. தனியார் ஓரளவிற்கு டிரஸ்ட்டை ஏற்படுத்தி, அது நம்பிக்கையுள்ள டிரஸ்ட்டாக இருந்து, அவர்கள் விண்ணப்பிப்பார்களேயானால், அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. எம். கே. கரீம் : தலைவர் அவர்களே, கூடலூர் தொகுதி — கூடலூர் என்றாலே—பல ஊர்களிலிருந்து வந்து சேர்ந்தவர்கள். அங்கே தெலுங்கு பேசக்கூடியவர்கள், கன்னடம் பேசக்கூடியவர்கள், மலையாளம் பேசக்கூடியவர்கள், தமிழ் பேசக்கூடியவர்கள், அதோடு சிலோன் ரிப்பாட்டிரியேட்ஸ் என்று சொல்லக்கூடியவர்கள் அனைத்தும் ஒருங்கிணைந்த கூடலூர் பகுதி, மிகவும் பின்தங்கியவர்கள். அதிலும் குறிப்பாக, ஆதிவாசிகள், குரும்பர், பனியர், மலைவாசிகள், மொண்டாளம் செட்டிகள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மொத்தத்தில் கூடலூர் (சிரிப்பு).

9–10 மணி

திரு. எம். கே. கரீம் : வடுகமொழி பேசக்கூடியவர்கள் அனைத்தும் நிறைந்த இடம். அதுவும் குறிப்பாக மலைப் பகுதி என்ற காரணத்தினால், வேறெங்கும் சென்று படிக்க இயலாத நிலையில் இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு ஏதாவது ஒரு சலுகை காட்டி எப்படியாவது அவர்களுக்கு ஒரு கல்லூரி அமைத்துத் தரவேண்டும் அதோடு, மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கவேண்டும் என்ற எனது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நமது முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கும், அதேபோல, போக்குவரத்து அமைச்சர் மாண்புமிகு திரு. கண்ணப்பன் அவர்களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி. தயாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கலைக் கல்லூரியோ அல்லது மற்ற கல்லூரியோ அமைக்க பொதுமக்கள் எவ்வளவு நிதியை அரசாங்கத்திற்கு அளிக்க வேண்டும் எவ்வளவு இடம் அளிக்க வேண்டும் என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புவதோடு எனது தொகுதியான ஆரணியிலே ரூ. 10 லட்சம் பொது மக்கள் சார்பாக தரத்தயா ராக உள்ள சூழ்நிலையில் ஒரு கல்லூரி அமைக்க அரசு முன் வருமா என்பதை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவரம் முழு அளவுக்கு என்னிடத் திலே இல்லாவிட்டாலும் கூட 10 லட்ச ரூபாய் ஒரு கல்லூரி தொடங்குவதற்கு போதுமானதல்ல. இரண்டாவது அதை நடத்துவதற்கு ஆண்டுக்குப் பல லட்சம் ரூபாய் செலவு ஏற்படும். இவற்றிற்கான வழிவகைகளை, ஆரணி சட்டமன்ற உறுப்பினர் தேடித் தந்தால், பரிசீலிக்கப்படும்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கல்லூரிகள் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு கள் இல்லையென்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்குவதைப்போல, இன்றைக்கு மலைப் பகுதிகளிலே வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய மக்கள் கல்வி கற்பதற்கு, தரைப்பகுதியிலே இருப்பதைப் போன்ற வசதிகள், அந்த மக்களுக்குக் குறைவாக இருக்கிற காரணத்தினால் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அங்கே தனியார் டிரஸ்ட் மூலமாக கல்லூரிகள் தொடங்குவதற்கு அதாவது தரைப்

1990 மே 8]

பகுதிகளில் உள்ளது போல, கூடலூர் போன்ற பகுதிகளுக்கும் தொடங்க முன் வரமாட்டார்கள் என்பதை கவனத்திலே கொண்டு எதிர்காலத்தில் இது போன்ற மலைப் பகுதியிலே வாழ்கிற மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில், அரசினுடைய கொள்கையை சற்று தளர்த்தி, கூடலூர் போன்ற மலை பகுதிகளில் கல்லூரிகளைத் தொடங்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகையிலே கல்லூரிகள் இருக்கின்றன. எந்த இடத்திலேயும், அந்தந்தத் தொகுதிக்கு ஒரு கல்லூரி என்ற கொள்கையை இந்த அரசு ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. ஏனென்றால், தொகுதிகள் மாறும் என்பது வேறு; நடைமுறையிலே ஒரு கல்லூரியை நடத்துவதில் ஆகிற செலவு எவ்வளவு இருக்கும் என்று நாம் பார்க்கிற போது, ஆயிரம் மாணவர்களுக்கு 95 ஆசிரியர்கள்—பேராசிரியர்கள் நியமிக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதனுடைய மாணவர் விகிதாசார அளவு, ஒரு ஆசிரியருக்கு 10 மாணவர்கள் அல்லது 12 மாணவர்கள்தான் விகிதாசாரத்திலே வருகிறார்கள். அந்த அளவு பெரும் செலவை அரசாங்கம் தொடர்ந்து ஏற்று, அந்த வகையிலே செலவிடுவதை விட, பொறியியல், அறிவியல் ஆராய்ச்சிக்காக தேவைப்படும் வழிகளில் நிதி கிடைக்குமானால் செலவிடுவது அதிகப் பயன் தரும்.

திரு. அ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கலைக் கல்லூரி துவங்க அனுமதி வழங்கா விட்டாலும், ஆண்டு தோறும் கல்லூரிகளில் பி.காம்., பி.எஸ்ஸி., போன்ற பட்டப் படிப்புகளில் சேர அதிகமான மாணவர்கள் விரும்புகிறார்கள். அதே சமயம், பி.ஏ. போன்ற பட்டப் படிப்புகளுக்குச் சேர மாணவர்கள் விரும்புவதில்லை, ஆகையால், பி.ஏ. போன்ற பட்டப் படிப்பிற்கான இடத்தைக் குறைத்து பி.காம்., பி.எஸ்ஸி., போன்ற பட்டப் படிப்புகளின் இடத்தை அதிகரிக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையிலே இருக்கிற ஒரு இக்கட்டான நிலைமை, தொடங்கிய எதையும் நிறுத்த முடியாது; தொடங்காதது எதையும், உடனே ஆரம்பிக்க முடியாது. இருந்தாலும், படிப்படியாக சில மாற்றங்களைக் கொண்டு, இன்றைய மாணவர்கள் எந்த வகையான படிப்பில் அதிகமாக ஈடுபட விரும்புகிறார்களோ அதற்கு விகிதாசார அடிப்படையில் அதிக முக்கியத்துவம் தருவதற்கு மட்டும் முயற்சிக்கப்படும். வரலாறு, பொருளாதாரம், தத்துவம் இவைகளை அடியோடு தடுப்பது அரசாங்கத்தினுடைய நோக்கம் அல்ல, தடுக்கவும் முடியாது. ஏனென்றால், இந்த ஆசிரியர்களை வீட்டுக்கு

அனுப்புவதை இந்த அரசோ மாண்புமிகு உறுப்பினர்களோ ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அரசாங்கத்தினுடைய கொள்கையும் அதுவல்ல. அந்த ஆசிரியர்களும் பணியாற்ற வேண்டும். கிடைக்கக் கூடிய புதிய நிதியை, நிலைமையின் தேவைக்கேற்ப கூடுமான வரையில் பயன்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கூடலூர் அடிவாரத்தில் இருக்கிற, திரு. கோவை மோகன்.

திரு இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடமிருந்து எந்த உதவியும் எதிர்பார்க்காமல், ''டிரஸ்ட்''டின் மூலமாக, இஞ்சினியரிங் கல்லூரியோ, பாலிடெக்னிக்கோ, கலைக் கல்லூரியோ அமைப்பதற்கு யாராவது முன் வந்தால், அவர்களுக்கு அப்படிப்பட்ட கல்லூரிகளைத் துவக்குவதற்கு அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

9-15 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரியோ, பாலிடெக்னிக்கோ மேலும் அதிகமாகத் தொடங்கத் தேவையில்லை. தொடங்கினால் இப்போதுள்ள பயிற்சிபெறுகிற மாணவர்கள் எண்ணிக்கை இன்னும் அதிகமானால் அவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையாகும் என்ற கருத்து பொறியியல் துறை நிபுணர்களால், பேராசிரியர்களால் கூறப்பட்டிருக்கிறது. எனவே மிக இன்றியமையாத ஒரு நிலைமை, இந்தத் தொழிற்கல்வியைப் பொறுத்து மிகச் சிறந்த தகுதி பெறுமாறு நடத்துவார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டால் அது பரிசீலிக்கப்படும். கலைக் கல்லூரியைப் பொறுத்த வரையில் எந்த வட்டாரத்தில் கேட்கிறார்களோ, அந்த வட்டாரத்தைப் பொறுத்து ஆராய்ந்து அணுகப்படும்—'ஏற்றுக்கொள்ளப்படும் என்று நான் சொல்லவில்லை'—அணுகப்படும், ஆராயப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை

*2659 திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்த நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆம். ஆலையின் தற்போதைய 1,750 டன் அரவைத் திறனை 2,500 டன்களுக்கு அதிகப்படுத்த மைய அரசிடமிருந்து உரிமம் பெறப்பட்டுள்ளது.